**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 22-ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 7/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 41/2020**

1.தமிழ்செல்வி
2.காஞ்சனாதேவி
3.செல்வராணி
4.பாண்டிச்செல்வன்
5.அருணாதேவி ....**மனுதார்கள் / வாதிகள்**

**/ எதிர் /**

1. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
2.மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை
3.கோட்டாட்சியர், சிவகங்கை
4.வட்டாட்சியர், மானாமதுரை
5.ராமு, ஊராட்சி மன்றத்தலைவர், கீழமேல்குடி
6.இராஜேந்திரன்
7.செல்லம்
8.வெள்ளைமுத்து
(மேற்படி 5 முதல் 8 பிரதிவாதிகளுக்காவும், மானாமதுரை வட்டம்,
கீழமேல்குடி கிராம பொது மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும்)
9.செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை
சருகணி ஆறு வடிநில உபகோட்டம், சிவகங்கை
10.உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை
சருகணி ஆறு வடிநில உபகோட்டம், மானாமதுரை.
11.உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை
சருகணி ஆறு வடிநில உபகோட்டம், மானாமதுரை.

...**எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு என்முன்பு 14.07.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.குரு.முருகானந்தம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 மற்றும் 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளநிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை.1 ரூல்.10(2) மற்றும் பிரிவு.151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி 1 முதல் 3 மற்றும் 5 வாதிகளை தாவா வழக்கிலிருந்து Ex-onarate செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2) மனுவின் சுருக்கம்:**

4ம் மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக தனது தாயார் 1ம் மனுதாரர் மற்றும் சகோதரிகளான 2, 3 மற்றும் 5 மனுதார்கள் / வாதிகள் சேர்ந்து தங்களுக்குரிய பாக ஈவினை பொறுத்து 4ம் மனுதாரர்/வாதிக்கு பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளனர் என்றும், அதன்படி தாவா சொத்து முழுவதும் 4ம் மனுதாரர்/வாதிக்கு பாத்தியமானபடியால், தாவா சொத்துக்களில் தங்களுக்குரிய உரிமையினை விலக்கு கொண்டுவிட்ட படியால் தாவா வழக்கிலிருந்து 1, 2, 3 மற்றும் 5ம் வாதிகளை நீக்கரவு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிருரையின் சுருக்கம்:**

தாவா சொத்துக்கள் ஆதியில் நாராயண அய்யர் மகன் சங்கரநாராயண அய்யர் மற்றும் சங்கரநாராயண அய்யர் மகன் நாராயண அய்யர் ஆகியோர்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அதனடிப்படையில் 1ம் வாதியின் கணவர் துரைப்பாண்டி நாடார் மேற்படியார்களிடமிருந்து கிரையம் பெற்று துரைப்பாண்டி பெயரில் பட்டா எண்.307ல் நிலஉடைமை குறிப்பேடு பதிவாகியுள்ளதாகவும், தாவா சொத்துக்கள் சம்பந்தமாக வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும்போது உரிமைமாற்றம் ஏற்படுத்தியுள்ள விபரத்தை வழக்கு ஆவணப்பட்டியலில் ஆவணங்களாக குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மேற்படி உற்பத்தி ஆவணத்தை உறுதி செய்யவே தாவா மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா வழக்கு புலஎண்.4/1C3ல் நிலம் கையகப்படுத்தப்பட்டதற்கு இழப்பீடு வழங்க மனுதாரின் தந்தை கோரிக்கை செய்தார் என்றும், புலத்தில் உள்ள கட்டிடங்கள் புலஎண்.3/1 கால்வாய் புறம்போக்கில் கட்டப்பட்டுள்ள கட்டிடமாக உள்ளது என்றும், மனுதாரர் வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் வீணாக தாவா மனுவை தாக்கல் செய்துள்ளதாக எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

**4) இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதாகவே உள்ளது. இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. வழக்கின் தன்மையிலும் எவ்வித மாற்றமும் ஏற்பட போவதில்லை. எனவே நீதியின் நலன் கருதி, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஜீலை 22-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.07.22 18:17:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் - இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.07.22 18:17:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No. 7/2025**
**in**
**OS. No.41/2020**

**Dated: 22.07.2025**